தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1973 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் இரண்டு வினாக்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தள்ளிவைக்கப்படுகின்றன.

Teachers' Council

*583 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the Expert Committee which studied the service conditions of the teachers in aided schools has recommended to the Government for the formation of Teachers' Council on the lines of Medical and Bar Councils ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இது பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சில ஆண்டுகளாக டாக்டர்களுக்கு என்று மெடிகல் கவுன்சில் இருக்கிறது. இரண்டரை லட்சம் ஆசிரியர்கள் இருப்பதால் அவர்களுடைய கோட் ஆப் காண்டக்ட், தொழில் முன்னேற்றம் போன்றவற்றைக் கவனித்துக்கொள்வதற்கு டீச்சர்ஸ் கவுன்சில் இருப்பது அவசியம் அல்லவா ? இது சர்க்காரின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பரிசீலனையில் இருக்கும் சட்டத்திலேயே இந்தக் கவுன்சில் அமைப்பதற்கும் வகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டாக்டர் பால் குழுவினர் இதுபற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரை தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற சட்டம்தான் இப்பொழுது பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருந்து

வருகிறது. ஆகவே வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் என்கிற அமைப்பு இருப்பதுபோன்று, டாக்டர்களுக்கு மெடிகல் கவுன்சில் இருப்பதுபோன்று ஆசிரியர்களுக்கும் அப்படியொரு கவுன்சில் வேண்டும் என்பதுதான் அந்தப் பரிந்துரை. அதுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முடிவு செய்யப்பட்ட பிறகு அதற்கான தனி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆசிரியர்களுடைய மாநாடு கோவையில் நடந்தபோது இதே கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறார்கள். இதற்கு ஒரு மசோதா தேவையா அல்லது சர்க்கார் உத்தரவின் அடிப்படையிலேயே இப்படியொரு கவுன்சிலை அமைக்கலாம் அல்லவா? அப்படியானால் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படியொரு கவுன்சில் அமைக்கலாம் என்கிற முடிவு எடுத்ததற்குப்பிறகு அதை எந்த வகையில் அமைப்பது என்பதைச் சட்டத் துறையைக் கலந்து ஆலோசித்துக்கொண்டு அதை உத்தரவின்மூலமாக நிறைவேற்றலாமா அல்லது தனி மசோதாவின்மூலமாக நிறைவேற்றலாமா என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்படி அமையவிருக்கும் கவுன்சில் கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியும் ஆராயுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரி ஆசிரியர்களைப் பற்றி ஆராயாது துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்துத்தான் இந்தக் கவுன்சில் அமையும்.

திரு. கே. எ. வகாப் : இப்படி அமைப்பதாக இருக்கும் ஆசிரியர்கள் கவுன்சில் அமைக்கப்பட்டால், இப்பொழுது தனித்தனியாக ஆசிரியர்கள் சங்கங்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே அவற்றையெல்லாம் கலைத்து விடுவார்களா ? அல்லது, கலைத்துவிட அரசாங்கம் கோரிக்கை விடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் தனித் தனிச் சங்கங்கள் வைத்திருப்பதன் நோக்கங்களும் குறிக்கோள்களும் வேறு வேறு. ஆசிரியர்களுடைய 'கோட் ஆப் காண்டக்ட்' எப்படி இருக்கவேண்டும் என்பதை ஆசிரியர்கள் கவுன்சில் வற்புறுத்தும். வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் இருப்பதைப்போன்று, ஆசிரியர்களுக்கும் ஒரு கவுன்சில் இருக்கவேண்டும் என்பதுதான் இதனுடைய நோக்கம் ஆகும். ஆசிரியர் சங்கம் செய்கிற பணிகள் அத்தனையையும் இந்தக் கவுன்சில் செய்யும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

திரு. நா. வெ. குருசாமி : ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு ஐந்தாறு ஆண்டுகளாக வேலையில்லாமலிருக்கும் ஆசிரியர்களைக்கொண்டு வேலையில்லா ஆசிரியர் கழகம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கென்று கழகம் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைத்தான் நாம் காண வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இம்மாதிரி ஆசிரியர் கவுன்சிலை அமைக்கும்போது ஆசிரியர்கள் சங்கங்களை கலந்து அதன் உறுப்பினர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பரிந்துரையில் இருப்பதால் முதலில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால் அதை எப்படி அமைப்பது என்று பிறகு யோசிக்க வேண்டிவரும். முதலில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில்தான் இப்பொழுது பரிசிலனை நடைபெற்று வருகிறது.

Post of Selection Grade Teachers

* 584 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the services rendered by the Grade II Graduate teachers of Government schools in private schools are also taken into account for purposes of promotion to selection grade posts in view of the fact that such posts have been sanctioned for private schools also ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தனியார் பள்ளிகளில் பல ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு பிறகு அவர்கள் அரசாங்கத் துறையில் புகுந்து விடுவார்கள். தனியார் பள்ளிகளில் வேலைபார்க்கும் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைப் பதவிகளை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறே அரசுப்பள்ளிப் ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலைப் பதவி உயர்வு அளிக்கும்போது முன்பு தனியார் பள்ளிகளில் பணிபுரிந்த காலத்தையும் ஏற்றுக்கொண்டு வழிவகை செய்ய முற்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படி அரசுப்பணியில் சேர்வதற்கு முன்னால் தனியார் பள்ளிகளில் பணி புரிந்த காலத்தையும் பதவி உயர்வுக்காகக் கணக்கில் எடுத்துகொள்வதற்கில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS